TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110285

1. District : அரியலூர் PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். Year: 2020 FIR No.: 05/2020 Date: 12.11.2020.
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act-1988 as amended by the PC Act (amendment) 2018 & Crpc Sections பிரிவுகள்: 7.(a) PC Act 1988 (as amended in 2018). & 102 Crpc.
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 11.11.2020 Date from : நாள் முதல் 15.45 hr Date to : நாள் வரை 23.45 Hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.11.2020 Time : நேரம் 12.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு, நேரில்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 2 கி.மீ. மேற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி துணை இயக்குநர் தோட்டக்கலைத் துறை மற்றும் மலைப்பயிர்கள் துறை அலுவலகம், அரியலூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. ந. கணேசமாணிக்கம். (b) Father's/ Husband's Name :
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் துணைக் காவல் கண்காணிப்பாளர் (g) Address : முகவரி மாவட்ட இலஞ்ச ஒழிப்பு அலுவலகம், திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. P. அன்பரசன், துணை இயக்குநர், தோட்டக்கலைத் துறை, அரியலூர்.
2) திரு. பாரதிதாசன் S/o அரங்கநாதன், கண்காணிப்பாளர், தோட்டக்கலைத்துறை, பெரம்பலூர்.
3) திருமதி. உமாதேவி, உதவியாளர், தோட்டக்கலைத்துறை, அரியலூர்.
4) திரு. ரவிசங்கர், உதவி தோட்டக்கலை அலுவலர், அரியலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது இன்று 12.11.2020 ஆம் தேதி பகல் 12.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.ந.கனக மாணிக்கம், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.ந.கனக மாணிக்கம், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அய்யா, பொருள் அரியலூர் மாவட்டம் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை துணை இயக்குநர் அலுவலகம்- 11.11.2020 அன்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது- மேல் நடவடிக்கை வேண்டி புகார் கொடுத்தல் தொடர்பாக. பார்வை 1.திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரின் செயல்முறை ந.க.எண். அ2/282/2020 நாள் 11.11.2020, 2.திடீர் சோதனை செயல்முறைகள் நாள் 11.11.2020 நான் திருச்சிராப்பள்ளி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். அரியலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலை பேசி ரகசிய தகவலின் அடிப்படையில் 11.11.2020 ஆம் தேதி அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து காவல் துணை கண்காணிப்பாளர் திரு.சந்திரசேகர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு அரியலூர் மாவட்டம் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை துணை இயக்குநர் அலுவலகம் மற்றும் கீழப்பழுவூர் அரசு தோட்டக்கலை பண்ணையிலும் பணிபுரியும் துணை இயக்குநர் மற்றும் ஊழியர்களும், இடைத்தரகர்கள் மூலமும் கையூட்டு கேட்டு பெறுவதாக கிடைத்த

- Separate sheet enclosed -

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 12.11.2020

[signature] 12/11/2020.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் R.CHANDRASEKAR
Rank: நிலை DSP/VAC/ARL ......... No. எண் .........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.11.2020, 14.00 மணி

தகவலை தொடர்ந்து திடீர் சோதனை செய்து ரூ.1,05,500/- கணக்கு கூற இயலாத அல்லது கையூட்டு தொகையாக அல்லது கையூட்டு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பணமாக இருக்கலாம் என்று சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றி அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக மடிக்கணினி மூலம் தயார் செய்யப்பட்ட செயல் முறையின் விபரம் பின்வருமாறு. 11.11.2020-ம் தேதி பிற்பகல் சுமார் 03.45 மணி முதல் அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சாலையில் கிழக்கில் பல்நோக்கு அலுவலக காம்பவுண்டுக்கு உள்ளே பல்நோக்கு அலுவலகத்திற்கு பின்புறம் கிழக்குப் பக்கத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக அலுவலகத்திற்கு வடக்கிலும், மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு தெற்கிலும், மேற்கு பார்த்த வாசல் உடைய தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை துணை இயக்குநர் அலுவலகத்தை மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர், திருச்சி அவர்களின் உத்தரவின் பேரில் திரு.ந.கனகமாணிக்கம், த/பெ நடராஜன், துணை ஆய்வுக்குழு அலுவலர், (திருச்சி, அரியலூர்) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, அரியலூர் பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.R.சந்திரசேகர் மற்றும் விஜிலென்ஸ் அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் நடவடிக்கைகள் குறித்து அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலக மடிக்கணினி மூலம் திருமதி.செ.பூங்கொடி, முதல் நிலை காவலர் 211 என்பவர் மூலம் தட்டச்சு செய்து தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள். அரியலூர் மாவட்டம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் தாங்களும், அலுவலக மற்ற ஊழியர்களும், இடைத்தரகர்கள் மூலமும் கையூட்டு கேட்டு பெறுவதாகவும், மேலும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு துணை இயக்குநர் அவர்கள் அவருக்கு கீழ் பணிபுரியும் வட்டார தோட்டக்கலை துறை உதவி இயக்குநர்களிடமிருந்தும் மற்றும் தோட்டக்கலைதுறை அலுவலகத்துடன் தொடர்புடைய பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் இலஞ்சமாக பணம் வசூல் செய்வதாக அரியலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இன்று 11.11.2020ஆம் தேதி மாலை சுமார் 03.45 மணியளவில் திருச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரின் உத்தரவின் பேரில் வந்திருந்த திரு.ந.கனகமாணிக்கம், த/பெ நடராஜன், துணை ஆய்வுக்குழு அலுவலர்(திருச்சி, அரியலூர்), மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, அரியலூர் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.R.சந்திரசேகர் மற்றும் அலுவலர்கள் உதவியுடன், மேற்படி தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அரியலூர் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை துணை இயக்குநர் அலுவலகமானது அரியலூர் பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் 1கி. மீட்டர் தூரத்தில் ஜெயங்கொண்டம் சாலைக்கு கிழக்கில் பல்நோக்கு அலுவலக காம்பவுண்டுக்கு உள்ளே அந்த அலுவலகத்திற்கு பின்புறம் கிழக்கிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், அரியலூர் அலுவலகத்திற்கு வடக்கிலும், மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு தெற்கிலும், மேற்கு பார்த்த வாசல் உடைய தரைதளத்துடன் கூடிய இரண்டு தளங்களுடன் கூடிய அலுவலகம் ஆகும். தரைதளத்தில் போர்ட்டிகோவும் அதன் உள்ளே ஒரு வராண்டாவும், வராண்டாவின் தெற்கு பக்கத்தில் மாடிக்கு செல்லக்கூடிய படிக்கட்டுகளும் உள்ளது. மேற்படி அலுவலகத்தில் உள்ளே உள்ள மெயின் ஹாலினை ஒட்டி வலதுபுறம் அலுவக கண்காணிப்பாளர் அறை உள்ளது. மெயின் ஹாலின் தெற்கில் பொதுவான அலுவலக கணினியுடன் கூடிய டேபிள் உள்ளது. அதற்கு கிழக்கில் கணினி பதிவாளர் இருக்கையும், அதற்கு பின்னே ஒரு இரும்பு பீரோவும் உள்ளது. அந்த பீரோவுக்கு அருகே இரண்டு பதிவேடுகள் அறையும் உள்ளது. மேற்படி பதிவேடுகள் அறையின் கிழக்கில் தட்டச்சர் இருக்கையும், அதற்கு அருகே ஒரு இரும்பு பீரோவும் உள்ளது. அதற்கு கிழக்கில் பி3 இருக்கையும், அதன் கிழக்கில் இரண்டு கழிவறைகளும் உள்ளது. கழிவறைக்கு வடக்கில் அலுவலக உதவியாளர் மேஜையும் அதனை அடுத்து கணினி பதிவாளர் மேஜையும் அதற்கு மேற்கில் முறையே பி2, பி1 பிரிவு அலுவலர்களுடைய இருக்கை உள்ளது. மேற்படி அலுவலக வராண்டாவின் தெற்கு பக்கத்தில் உள்ள படிகட்டு வழியாக சென்றால் முதல் தளம் உள்ளது. முதல் தளத்தில் கிழக்கு மேற்காக நீண்ட வராண்டாவும், அதற்கு வடக்கு பக்கத்தின் மேற்கில் காத்திருப்போர் அறையும், அதற்கு கிழக்கில் கழிவறையும் அதையடுத்து துணை இயக்குநர் அறையும் உள்ளது. துணை இயக்குநர் அறையானது தெற்கு பார்த்த வாசல் கொண்டதாகவும், துணை இயக்குநர் இருக்கையானது மேற்கு பார்த்தும் உள்ளது. மேற்படி அறையின் மேற்கு பக்கத்தில் மரபீரோவும் அதற்கு வடக்கில் கழிவறையும் உள்ளது. மேற்படி வராண்டாவின் கிழக்கு பக்கம் மாடியின் திறந்தவெளிக்கு செல்ல வாசல் உள்ளது. மேற்படி

வராண்டாவின் மேற்கு பக்கத்தில் இரண்டாவது தளத்திற்கு செல்லும் படிக்கட்டுகளும் உள்ளது. இரண்டாவது தளத்தில் கிழக்கு மேற்கான உள்ள வராண்டாவிற்கு வடக்கில் மேற்கு பக்கத்தில் கழிவறையும், அதற்கு கிழக்கில் கூட்ட அரங்கமும் உள்ளது. அந்த கூட்ட அரங்கம் மேற்கு பார்த்த வாசலுடன் உள்ளது. அதில் கூட்ட அரங்கத்தின் வடக்கில் கணக்கு மேலாளர் இருக்கை கிழக்கு பார்த்தும், தோட்டக்கலை அலுவலர்(தொழில்நுட்பம்) அவர்களது இருக்கை தெற்கு பார்த்தும் உள்ளது. மேற்படி திடீர் ஆய்வு செய்த போது அலுவலகத்தில் இருந்த 1.திரு. P.அன்புராஜன், துணை இயக்குநர், தோட்டக்கலை துறை, அரியலூர் அவர்களின் அறை சோதனை செய்யப்பட்டது அதன் தொடர்ச்சியாக மேற்படி துணை இயக்குநர் அலுவலக வாயிலில் நின்ற அவருக்கு சொந்தமான TN 45 AV 9184 என்ற எண்ணுள்ள Mahindra Veritio வாகனத்தை ராஜசேகர் (Personal Driver) என்பவர் உதவியுடன் சோதனை மேற்கொண்ட போது வாகனத்தின் பின்இருக்கையில் இருந்த வெளிர் காப்பி நிற கைப்பையில் இரண்டு காக்கி கவர்களில் ரூ.500 நோட்டுக்களாக இருந்ததை எண்ணி பார்த்த போது ஒரு கவரில் ரூ.25,000/-மும் மற்றொரு கவரில் ரூ.17,000 மும் இருந்தது. இந்த பணம் ரூ.42,000/- குறித்து அவரிடம் விசாரணை செய்த போது அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் மேற்படி பணம் மற்றும் அவரது வெளிர்காப்பி நிற கைப்பையும் கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்தின் தரைதளத்தில் இருந்த அலுவலக அலுவலர்களான 2) திரு. A.பாரதிதாசன், கண்காணிப்பாளர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், பெரம்பலூர் 3. திரு.K.R.கிருஷ்ணமூர்த்தி, கணக்கு மேலாளர், தோட்டக்கலை துறை, அரியலூர், 4. திருமதி.G.சுகன்யா, இளநிலை உதவியாளர், தோட்டக்கலை துறை, அரியலூர் 5.திருமதி.N.உமாதேவி, உதவியாளர், தோட்டக்கலை துறை, அரியலூர் 6.திருமதி.E.பிரேமா, தட்டச்சர், தோட்டக்கலை துறை, அரியலூர், 7.திருமதி. M.ஜீவா, Data Entry Operator, தோட்டக்கலை துறை, அரியலூர், 8. திரு. P.சக்திவேல், Data Entry Operator, தோட்டக்கலை துறை, அரியலூர், 9. திருமதி.S.பூங்கொடி, இளநிலை உதவியாளர், தோட்டக்கலை துறை, அரியலூர், 10.திரு.P.பிரவீன், உதவி இயக்குநர், தோட்டக்கலை துறை, ஆண்டிமடம் வட்டாரம், அரியலூர், 11. திரு.A.சின்னகருப்பன், உதவியாளர், தோட்டக்கலை துறை, அரியலூர், 12.திரு.G.அன்பெழில், அலுவலக ஓட்டுநர், தோட்டக்கலை துறை, அரியலூர், 13.திரு.S.ராஜேந்திரன், துணை தோட்டக்கலை அலுவலர், தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம், ஆண்டிமடம் வட்டாரம், அரியலூர், 14.திரு.R.மாணிக்கம், அலுவலக உதவியாளர்(தற்காலிகம்), தோட்டக்கலை துறை, அரியலூர், 15.திரு K.கோபிநாத், (உர விற்பனையாளர்) த/பெ காமராஜ், தெற்கு தெரு, பாளையப்பாடி, அண்ணிமங்களம் பஞ்சாயத்து, அரண்மனை குறிச்சி, அரியலூர். 16. திரு. R..ரமேஷ், த/பெ ரெங்கநாதன், தெற்கு தெரு, பள்ளகிருஷ்ணாபுரம், அரியலூர், 17.செல்வி.G.மாலதி, த/பெ கோவிந்தராஜ், தோட்டக்கலை அலுவலர், அரியலூர், 18.திரு. J.ராஜசேகர், துணை இயக்குநரின் Personal Driver ஆகியோர் இருந்தார்கள். மேற்படி அலுவலர்களை சோதனை செய்த போது திரு.A.பாரதிதாசன் என்பவரிடம் ரூ.17,580 இருந்தது அது குறித்து அவரிடம் விசாரணை செய்த போது ரூ.2,580 தனது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் கூறியதன் பேரில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. ரூ. 15,000-திற்கு சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் கையூட்டு பணமாக இருக்கலாம் என்று கருதி அந்த பணமும் கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அலுவலக உதவியாளர் திருமதி.N.உமாதேவி என்பவரை சோதனை செய்த போது அவரது கைப்பையில் ரூ.9,500 இருந்தது. அதுகுறித்து அவரிடம் விசாரித்த போது அவரது கணவர் ATM-லிருந்து எடுத்த ரூ.9,500/-ல் அவருக்கு ரூ.5,000/- மட்டும் கொடுத்தாக தெரிவித்தார். இதனை அவருடைய கணவரிடமும் அலைபேசியில் தொடர்பு கொண்டு விசாரித்த போது அவரும் ஒத்து கூறினார் அதனால் அவரிடம் அதிகமாக இருந்த ரூ.4,500/- குறித்து அவர் தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணமும் கையூட்டாக பெற்ற பணமாக இருக்கலாம் என்று கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்திலிருந்த மற்ற அலுவலர்களை சோதனை செய்த போது அவர்கள் வைத்திருந்த பணம் குறித்து விசாரணை செய்த போது சரியான முகாந்திரம் கூறிய தொகையை திரும்ப அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. அது தொடர்பான விபரம் கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் முகவரி | வைத்திருந்த தொகை | கைப்பற்றப்பட்ட ரூபாய் | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | திரு.அன்புராஜன், 56/20, த/பெ பிச்சைமுத்து, துணை இயக்குநர், தேட்டக்கலைதுறை, அரியலூர் | ரூ.43,120 | ரூ.42,000 | ரூ.1,120 |
| 2. | திரு.பாரதிதாசன், 46/20 த/பெ அரங்கராசன், கண்காணிப்பாளர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், பெரம்பலூர், 2/33, அண்ணாநகர், அரியலூர் | ரூ.17,580 | ரூ.15,000 | ரூ.2,580 |
| 3. | திரு.கிருஷ்ணமூர்த்தி, 66/20, த/பெ ராமசந்திரன், கணக்கு மேலாளர், தோட்டக்கலைதுறை, அரியலூர். | ரூ.490/- | - | ரூ.490/- |
| 4. | திரு.சுகன்யா, இளநிலை உதவியாளர், தோட்டக்கலை துறை, அரியலூர், வடக்கு தெரு, பெரிய வெண்மணி அஞ்சல், குன்னம் தாலுக்கா, பெரம்பலூர் மாவட்டம். | ரூ.20/- | - | ரூ.20/- |
| 5. | திரு.உமாதேவி, உதவியாளர், தோட்டக்கலை துறை, அரியலூர் | ரூ.9,500/- | 4500 | ரூ.5,000/- |
| 6. | செல்வி.பிரேமா, தட்டச்சர், தோட்டக்கலை துறை, அரியலூர், 2/13D, அன்பு நகர், 7வது தெரு, அரும்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். | ரூ.5,210/- | - | ரூ.5,210/- |
| 7. | திருமதி.ஜீவா, Data Entry Operator, தோட்டக்கலை துறை, அரியலூர்,D-5, ராஜீவ் நகர், வாலாஜா நகரம், அரியலூர். | ரூ.1,700/- | - | ரூ.1,700/- |
| 8. | திரு.சக்திவேல், Data Entry Operator, தோட்டக்கலை துறை, அரியலூர், 8/67B, அரியலூர் ரோடு, செந்துறை, அரியலூர் மாவட்டம். | ரூ.80/- | - | ரூ.80/- |
| 9. | திருமதி.பூங்கொடி, இளநிலை உதவியாளர், தோட்டக்கலை துறை, அரியலூர், 19B/3C, கே.கே. நகர், அண்ணா நகர், அரியலூர் | ரூ.650/- | - | ரூ.650/- |
| 10. | திரு.பிரவீன், உதவிஇயக்குநர், தோட்டக்கலை துறை, ஆண்டிமடம் வட்டாரம், அரியலூர், | ரூ.4,510/- | - | ரூ.4,510/- |
| 11. | திரு.சின்னகருப்பன், உதவியாளர்(தற்காலிகம்), தோட்டக்கலை துறை, அரியலூர், | ரூ.570/- | - | ரூ.570/- |
| 12. | திரு.அன்பெழில், அலுவலக ஒட்டுநர், தோட்டக்கலை துறை, அரியலூர், 3/101, வடக்கு தெரு, நமங்குணம், அரியலூர். | ரூ.800/- | - | ரூ.800/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 13. | திரு.ராஜேந்திரன், த/பெ சின்னப்பிள்ளை, துணை தோட்டக்கலை அலுவலர், தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம், ஆண்டிமடம், அரியலூர், பொய்யாதநல்லூர் அஞ்சல், அரியலூர் மாவட்டம். | ரூ.8,570/- | - | ரூ.8,570/- |
| 14. | திரு.மாணிக்கம், அலுவலக உதவியாளர்(தற்காலிகம்), தோட்டக்கலை துறை, அரியலூர், எண்.10, ஜமுக்காலக்கார தெரு, அரியலூர். | ரூ.100/- | - | ரூ.100/- |
| 15. | திரு.கோபிநாத், (டீ விற்பனையாளர்) த/பெ காமராஜ், தெற்கு தெரு, பாளையப்பாடி, அண்ணிமங்களம் பஞ்சாயத்து, அரண்மனை குறிச்சி, அரியலூர். | ரூ.1,250/- | - | ரூ.1,250/- |
| 16. | திரு.ரமேஷ், த/பெ ரெங்கநாதன், தெற்கு தெரு, பள்ளகிருஷ்ணாபுரம், அரியலூர், | ரூ.3,530/- | - | ரூ.3,530/- |
| 17. | செல்வி.மாலதி, த/பெ கோவிந்தராஜ், தோட்டக்கலை அலுவலர்(தொழில்நுட்பம்), அரியலூர் | ரூ.5,635/- | - | ரூ.5,635/- |
| 18. | திரு.ராஜசேகர், துணை இயக்குநரின் (Personal Driver), 17B அம்பேத்கர் நகர், திருவரும்பூர், திருச்சி-13 | - | - | - |
| | மொத்தம் | 1,03,715/- | 61,500/- | 42,215/- |

மேலும் மேற்படி திடீர் தணிக்கையின் போது அரியலூர் தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலக அலுவலர்களின் வருகை பதிவேடு-2020, தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலக தொழில்நுட்ப அலுவலர்களின் வருகை பதிவேடு-2020,தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலக அலுவலர்களின் இயக்க பதிவேடு-2020 தற்செயல்விடுப்பு பதிவேடு, லாக் புக் பகுதி-I ஈப்பு எண் TN 06 Y 4015 தொகுதி -I (பக்கம் 41 வரை எழுதப்பட்டது) ஆகிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. இதனை தொடர்ந்து மேலும் துணை இயக்குநர் அவர்களை விசாரணை செய்தபோது தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கீழப்பழுவூர் அரசு தோட்ட கலை பண்ணையில் உள்ள உதவி தோட்டக்கலை அலுவலர் திரு.ரவிசங்கர் என்பவரிடம் கையூட்டு பணம் இருப்பதாக தெரிவித்ததன் பேரில் மேற்படி பண்ணையை ஆய்வு செய்ய வேண்டி துணை இயக்குநர் திரு.அன்புராஜன் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு அரியலூர் To தஞ்சாவூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் தெற்கே சுமார் 10 கிலோமீட்டர் தொலைவில் செட்டிநாடு சிமெண்ட் பேக்டரியில் இருந்து மேற்கே சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவில் இருந்த மேற்படி அரசு பண்ணைக்கு சென்ற போது மேற்படி அலுவலகமானது தெற்கு நோக்கிய வாயிலை கொண்டதாகவும் முன்பக்கம் போர்டிகோவும் அதனை தொடர்ந்து ஹாலும் அதில் உதவி தோட்டக்கலை அலுவலர் திரு.ரவிசங்கர் என்பரின் இருக்கை கிழக்கு நோக்கியும் அதற்கு பின்னால் ஒரு பச்சைநிற இரும்பு பீரோ இருந்தது அந்த பீரோவை சோதனை செய்ததில் ஒரு காக்கிநிற கவரில் ரூபாய் 17,000/- மும் மற்றொரு வெள்ளைநிற Sundaram Finance Enduring Values, New age thinking என்று அச்சிடப்பட்ட கவரில் ரூபாய் 7,000/-மும், தோட்டக்கலை துணை இயக்குநர், தோட்டக்கலை தகவல் பயிற்சி மையம், பல்துறை வளாகம் பின்புறம், ஜெயங்கொண்டம் சாலை, அரியலூர் என்று முகவரியிடப்பட்ட காக்கிநிற கவரில் ரூ.20,000/-மும் இருந்தது. இது தொடர்பாக அவரிடம் விசாரணை செய்ததில் அந்த தொகைக்கு சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த தொகை ரூ.44,000/-மும் கவருடன் செயல்முறை நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்டது. ஹாலுக்கும் மேற்கே ஒரு அறையும் அதற்கு வடபுறம்

கழிவறையும் உள்ளது. முதல் தளத்தில் ஆய்வக அறையும் உள்ளது. அலுவலகத்தின் தரைதளத்தின் கிழக்கு பக்கமாக பண்ணை கிடங்கும் உள்ளது. மேலும் மேற்படி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் 1) பணியாளர் வருகை பதிவேடு-2020, 2) ரசீது புத்தகம் (13701 முதல் 13750 வரை உள்ளதில் வரிசை என் 0013728 வரை எழுதப்பட்டுள்ளது) 3) State Horticulture Farm, Keelapalur Seeds and Plants Register 2020-2021, 4) State Horticulture Farm, Keelapalur Nursery Register 2020-2021, 5) State Horticulture Farm, Keelapalur Labour Signature Register 2020-2021 6) State Horticulture Farm, Keelapalur Cash Book 2020-2021 7) State Horticulture Farm, Keelapalur Staff Movement Register 2020-2021 8) 15282 என்ற எண்ணுள்ள ரசீது புத்தகம் (Acknowledgment for receiving of new HCI Booklet Slip 458431 முதல் 458460 வரை உள்ளதில் 458454 வரை எழுதப்பட்டது) ஆகிய ஆவணங்கள் ஆய்வின் போது கைப்பற்றப்பட்டது. கைப்பற்றபட்ட தொகை மற்றும் ஆவணங்களுடன் திரு.ரவிசங்கர் அவரையும் உடன் அழைத்துக்கொன்டு துணை இயக்குநர் அலுவலகம் வரப்பட்டது. மேலும் இந்த திடீர் ஆய்வின்போது அய்யா புட்ஸ் லைப் கேர் என்ற நிறுவனத்தின் பூர்த்திசெய்யப்படாத இரண்டு Cash/Credit Bill-ம், தமிழ்நாடு கோ-ஆப் மார்கெட்டிங் /பெடரேஷன் லிமிடேட் நிறுவனத்தின் ரூ.9,50,000/-ற்கான Tax Invoice கைப்பபற்றப்பட்டது. மேற்படி அந்த அலுவலகத்தில் பணிபுரிந்த திருமதி.சுகன்யா, இளநிலை உதவியாளர், செல்வி.மாலதி, தோட்டக்கலை அலுவலர்(தொழில்நுட்பம்) மற்றும் திரு.அன்புராஜன், தோட்டக்கலை துணை இயக்குநர் அவர்களிடமும் தனித்தனியாக எழுத்துமூலமான விளக்கம் பெறப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் அலுவலர்கள் விசாரணைக்கு தேவைப்படும் போது ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டு திடீர் சோதனை செயல்முறைகள் இரவு 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. 11-11-2020ம் தேதி அரியலூர் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் அலுவலகம் மற்றும் கீழப்பழுவூர் தோட்டக்கலைத்துறை பண்ணையிலும் திடீர் ஆய்வின் போது 1) திரு.அன்புராஜன், தோட்டக்கலை துணை இயக்குநர், அரியலூர், 2.திரு.பாரதிதாசன், த/பெ அரங்கராசன், கண்காணிப்பாளர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், பெரம்பலூர், 3. திருமதி.உமாதேவி, உதவியாளர், தோட்டக்கலை துறை, அரியலூர், 4.திரு.ரவிசங்கர், உதவி தோட்டக்கலை அலுவலர், அரியலூர். ஆகியோர்களிடம் கைப்பற்றப்பட்ட மொத்தம் ரூபாய் 1,05,500/-க்கு மேற்படி நபர்கள் சரியான முகாந்திரம் கூற இயலாததால் அந்த பணம் யாரிடமாவது கையூட்டாக பெற்று வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பணம் கைப்பற்றப்பட்டதால், அந்த பணம் லஞ்சப் பணம் (Illegal Gratification) எனக் கருதப்படுவதால் மேற்படி அலுவலர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 11.11.2020 ஆம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் ரொக்கம் ரூ.1,05,500/- மற்றும் இதர ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்) ந.கனக மாணிக்கம், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சிராப்பள்ளி.

அய்யா, இன்று 12.11.2020 ஆம் தேதி 12.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனு தொடர்பாக சட்ட கருத்துரை பெற்றுஅரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 05/2020 U/s 7 of the Prevention of Corruption Act1988(as amended in 2018) r/w 102 Cr.P.C- ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் தலைமை நீதித்துறை நடுவர்/ சிறப்பு நீதிபதி, அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

12/11/2020

(R.சந்திரசேகர்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.